தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 71.70 அடி**

First Published : 06 Apr 2010 05:04:10 AM IST

தஞ்சாவூர், ஏப். 5: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 71.70 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,470 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

First Published : 06 Apr 2010 03:17:34 AM IST

தருமபுரி, ஏப்.5: விவசாயிகளுக்கு பகலில் 6 மணி நேரமும், இரவு 8 மணி நேரமும் சீரான மின்சாரம் வழங்கக் கோரி தருமபுரி மின்திட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன் திங்கள்கிழமை தமிழக விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.ஏ. சின்னசாமி தலைமை தாங்கினார்.

விவசாயத்திற்கு சீரான மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும்.

அடிக்கடி ஏற்படும் மின்தடை மற்றும் குறைந்த அழுத்த மின்சாரத்தை உடனடியாக சீராக்கி மின்மோட்டார்கள் பாதிப்பை தடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

மாநிலப் பொருளாளர் கே.பி. வேலுமணி, மாநிலத் துணை தலைவர் கே.எஸ். ஆறுமுகம், தருமபுரி மாவட்டத் தலைவர் பி.ஆர். செங்கோடன், செயலர் கே. சக்திவேல், கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் பி.ஸ்ரீராமரெட்டி, செயலர் சென்னையநாயுடு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**முந்திரித் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி உயர்வு**

First Published : 06 Apr 2010 02:01:00 AM IST

மார்த்தாண்டம், ஏப். 5: முந்திரித் தொழிலாளர்களுக்கு மார்ச் மாதம் முதல் பஞ்சப்படி உயர்த்தப்பட்டுள்ளதாக ஐஎன்டியுசி தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. இதுகுறித்து அச் சங்கத்தின் முந்திரிச் சங்கச் செயலர் நானுக்குட்டன் வெளியிட்ட அறிக்கை:

முந்திரித் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி 4 ரூபாய் 18 காசுகள் உயர்ந்துள்ளது. இதுவரையிலும் ஒரு வேலைக்கு ரூ. 26.98 ஆக இருந்த பஞ்சப்படி தற்போதைய உயர்வின்படி ரூ. 31.16 ஆக உயர்ந்துள்ளது. இந்த உயர்வு மார்ச் 1-ம் தேதி முதல் கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும் என்றார் அவர்.

**கூட்டுறவுச் சங்கத்தில் உருளைக் கிழங்கு விற்பனை**

First Published : 06 Apr 2010 05:12:24 AM IST

பெரம்பலூர், ஏப். 5: பெரம்பலூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உருளைக் கிழங்கு விற்பனை தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

பெரம்பலூர்- ஆத்தூர் சாலையில் உள்ள பெரம்பலூர் வட்ட வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற இந்த விழாவில், கூட்டுறவுச் சங்க மண்டல இணைப் பதிவாளர் எஸ். திருகுண ஐயப்பதுரை, உருளைக் கிழங்கு விற்பனையைத் தொடக்கி வைத்துப் பேசியது:

பெரம்பலூர் மாவட்ட பொதுமக்களுக்காக மேட்டுப்பாளையத்தில் இருந்து தரமான, உயர்தர உருளைக் கிழங்குகள் கொள்முதல் செய்யப்பட்டு, குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், பெரிய (பெல்லாரி) வெங்காயமும் விற்பனை செய்யப்பட உள்ளது. பெரம்பலூர் நகரில் உள்ள 10 நியாய விலைக் கடைகள், உழவர் சந்தைகளிலும் விரைவில் விற்பனை செய்யப்படும்.

கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் உருளைக் கிழங்குகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களும், உணவக உரிமையாளர்களும் கூட்டுறவு விற்பனை சங்கம், நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் உருளைக் கிழங்குகளை பெற்று பயன்பெறலாம் என்றார் அவர்.

விழாவில், பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர் ஜெயராமன், தனி அலுவலர் அறப்பள்ளி, சார் பதிவாளர் மருதமுத்து, செயலர் காந்திமதி, எழுத்தர் ராம்குமார், விற்பனையாளர்கள் ராகவன், செல்வம் ஜானகி, சந்திரவடிவம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**ஆனைமலை கொப்பரை ஒரு கிலோ 31.55 ரூபாய்**

பொள்ளாச்சி: ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 31.55 ரூபாய் விலை கிடைத்தது. ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 15 பேர் 42 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு எடுத்து வந்தனர். கொப்பரையை நான்கு வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 35 மூட்டை ஏலம் விடப்பட் டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 27.05 ரூபாய் முதல் அதிகபட்சமாக 31.55 ரூபாய் வரை விலை கிடைத்தது.

இரண்டாம் தர கொப்பரை ஏழு மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 17.50 ரூபாய் முதல் அதிகபட்சமாக 23.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறியதாவது: ஒரு மாதமாக கொப் பரை ஏலத்திலும் விலையில் பெரிய மாறுதல்கள் ஏற்படவில்லை. கடந்த வாரத்தை விட கிலோவுக்கு 25 பைசா விலை

குறைந்துள்ளது. அரசு கொப்பரை கொள்முதலை எதிர்பார்த்து விவசாயிகள் முதல் தர கொப்பரையை இருப்பு வைத்துள்ளனர்' என்றனர்.

**வட மாநில வியாபாரிகளால் பருப்பு விலை 'கிடுகிடு' உயர்வு**

பண்ருட்டி: வட மாநில வியாபாரிகள் கொள்முதல் அதிகரிப்பால் துவரம் பருப்பு, உளுந்து, கடலை, பாசி பயறு விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. துவரம் பருப்பு, பாசி பருப்பு, உளுந்து உற்பத்தி குறைவால் கடந்த ஆண்டு 40 ரூபாயில் இருந்த பருப்பு விலை 'ஜெட்' வேகத்தில் இரு மடங்காகவும், துவரம் பருப்பு 100 ஆகவும் உயர்ந்தது. கடந்த டிசம்பர் மாதம் முதல் குஜராத், கர்நாடகா குல்பர்கா, மகாராஷ்டிரா மாநில துவரம் பருப்பு, பாசி பயறு, உளுந்து வரத்து துவங்கியதால் பருப்பு விலை சற்று குறைய துவங்கியது. அதனால் துவரம் பருப்பு முதல் ரகம் 60 ரூபாயும், பாசி பயறு 75ம், உளுந்து 54 என விலை குறைந்தது. ஆனால் தற்போது வடமாநிலங்களில் தேவை அதிகரிப்பால் துவரம் பருப்பு, பாசி பயறு, உளுந்து விலை தற்போது மீண்டும் 'கிடுகிடு'வென உயர துவங்கியுள்ளது. பண்ருட்டி மார்க்கெட்டில் துவரம் பருப்பு முதல் ரகம் ஒரு கிலோ 72 ரூபாயும், பைத்தம் பருப்பு 85ம், உளுந்து 60ம், குண்டு உளுந்து 72 ரூபாய் என விலை உயர்ந்துள்ளது. கடலை பயறு 30ல் இருந்து 32ம், மல்லி 40ல் இருந்து 45ம் உயர்ந்துள்ளது. ஆந்திர மாநிலம் குண்டூரில் வாட் வரி பிரச்னைக்காக மார்க்கெட் அடைக்கப் பட்டுள்ளதால் 52 ரூபாயாக இருந்த வற்றல் மிளகாய் 60 ரூபாயாக உயர்ந்துள்ளது.

**உற்பத்தி குறைவால் முந்திரி விலை உயர்வு**

பண்ருட்டி: முந்திரி உற்பத்தி குறைவு காரணமாக, அதன் விலை கிலோவுக்கு 10 ரூபாய் உயர்ந்துள்ளது. பண்ருட்டி பகுதியில் கடந்த ஆண்டு முந்திரி மரங்களில் பூக்கள் வைத்த நேரத்தில் பருவம் மாறி மழை பெய்ததால் உற்பத்தி 50 சதவீதம் குறைந்தது. இதனால் பலர் முந்திரி மரங்களை வெட்டி புதிய தோட்ட பயிர்களை பயிரிட துவங்கினர். தற்போது கேரளா, ஆந்திராவில் முந்திரி கொட்டை அறுவடை நடக்கிறது. அங்கும் உற்பத்தி குறைந் துள்ளதால் வியாபாரிகளும், ஏற்றுமதியாளர்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் முந்திரிகளை நம்பி உள்ளனர். இதனால் 80 கிலோ எடை கொண்ட முந்திரி கொட்டை 4,000லிருந்து 4,500 ரூபாயாகவும், இறக்குமதி முந்திரி கொட்டை 3,000லிருந்து 3,500 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக முந்திரி அனைத்து ரகங்களும் கிலோ ஒன்றுக்கு சராசரியாக 10 முதல் 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

**சித்திரைப்பட்டத்தில் எள் சாகுபடி: இணை இயக்குனர் வேண்டுகோள்**

கடலூர்,: சித்திரைப்பட்டத்தில் எள் சாகுபடி செய்து பயனடைய விவசாயிகளை இணை இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து வேளாண் இணை இயக்குனர் இளங் கோவன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் 1.16 லட் சம் எக்டரிலும், கடலூர் மாவட்டத்தில் 5,000 எக்டர் பரப்பளவிலும் எள் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி தொழில் நுட்பங் கள் சரியாக கடைபிடிக்காததால் எள் பயிரின் சராசரி மகசூல் குறைவாக உள் ளது. எள் சாகுபடியில் சரியான தொழில் நுட்பங் களை தவறாமல் கடைபிடித்து, சாகுபடி செய்தால், எக்டர் ஒன்றுக்கு சராசரியாக 2,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும். எனவே பாசன வசதியுள்ள விவசாயிகள் த்திரைப்பட்டத் தில் எள் பயிர் சாகுபடி செய்ய கேட்டுக் கொள்கிறேன். சித்திரைப்பட்டத்தில் எள் பயிர் சாகுபடி செய்ய டி.எம்.வி.3. 4, கோ 1, வி.ஆர்.ஐ.1 மற்றும் எஸ்விபிஆர். 1 ஆகிய ரகங்கள் ஏற்றவை. சித்திரைப்பட்ட எள் சாகுபடி செய்யும் விவசாயிகள் சாகுபடி தொழில் நுட்பங்களை தவறாமல் கடைபிடித்து மகசூல் பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**கடலூர் மார்க்கெட் கமிட்டியில் வேர்க்கடலைக்கு கூடுதல் விலை: விவசாயிகள் மகிழ்ச்சி**

கடலூர்: கடலூர் முதுநகர் மார்க் கெட் கமிட்டியில் நேற்று வேர்க்கடலைக்கு கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கடலூர் முதுநகர் மார்க்கெட் கமிட்டியில் கடலூர், திருவந்திபுரம், நாணமேடு, உச்சிமேடு, தியாக வல்லி, காரைக் காடு கண்டக்காடு, சில் லாங்குப்பம், சான்றோர் பாளையம், பில்லாலி தொட்டி உட்பட கடலூர் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் விளையும் விவசாய பொருட்களை கொண்டு வந்து விற் பனை செய்கின்றனர்.

தற்போது கடலூர் பகுதியில் வேர்க்கடலை சீசன் என்பதால் மார்க் கெட் கமிட்டிக்கு வேர்க் கடலை அதிகளவில் வரத் துவங்கியுள்ளது. 12க்கும் மேற்பட்ட விவசாயிகள் நேற்று காலை வேர்க் கடலை மூட்டைகளுடன் விற்பனைக்கு வந்தனர். 91 லாட்டுகள் 400 மூட்டை வேர்க்கடலை விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்தது. வேர்க்கட லையை வாங்க விருதுநகர், பண்ருட்டி, விழுப்புரம், புவனகிரி, பரங்கிப் பேட்டை, திருக்கோவிலூர், கடலூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் மற்றும் வியாபார பிரதிநிதிகள் 12 பேர் வேர்க்கடலை மூட்டைகளை ஆய்வு செய்து விலை நிர்ணயம் செய்தனர். இதில் குறைந்தபட்சமாக 3,000 ரூபாயிலிருந்து அதிகபட்சமாக 3,229 ரூபாய் வரை விலை போனது. இந்த ஆண்டில் நேற்று மட்டும் அதிகபட்சமாக 400 மூட்டைகள் வேர்க் கடலை வரத்து இருந்தது குறிப்பிடத்தக்கதது.

**உப்பனாற்றில் 50 கிலோ எடை திருக்கை மீன்**

கிள்ளை: சிதம்பரம் அருகே உப்பனாற்று படுகையில் 50 கிலோ எடையில் திருக்கை மீன் கிடைத்தது. சிதம்பரத்தில் அடுத்த தாண்டவராயகன் சோழகன் பேட்டையைச் சேர்ந்தவர்கள் மாப்பை, பொய்யா தம்பதியினர். இவர்கள் நேற்று உப்பனாற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந் தனர். அப்போது வலையில் 50 கிலோ எடையுள்ள திருக்கை மீன் கிடைத்தது. இருவரும் போராடி கரைக்கு இழுத்தனர். இதுபற்றி அவர்கள் கூறுகையில் 'மருத்துவ குணம் கொண்ட இந்த திருக்கை மீன் குளிர்ச்சியானது. கடலில் ஆழமான பகுதியில் மட்டுமே கிடைக்கும். உப்பனாற்றில் இவ்வளவு பெரிய மீன் கிடைத்தது இப்போது தான். இம்மீனில் 3 வகையான கொடிய முள் இருக் கும். கிலோ ஒன்றுக்கு 50 ரூபாயில் இருந்து 70 வரை மார்க்கெட் விலை கிடைக் கும்' என்றனர்.

**திண்டுக்கல் உழவர்சந்தைக்கு வரும் மக்கள் ஏமாற்றம் : காய்கறி, மீன் விற்பனையில் 'தனியார்' ஆதிக்கம்**

திண்டுக்கல் : குறைந்த விலையில் காய்கறி, மீன் வாங்குவதற்காக ஏராளமானோர், திண்டுக்கல் உழவர்சந்தைக்கு வருகின்றனர். அதிகாரிகளின் கண்காணிப்பு இல்லாததால், கூடுதல் விலை கொடுத்து வாங்கிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமல்,நேரடியாக விவசாயிகள் விளைபொருட்களை விற்க உழவர் சந்தை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. காய்கறிகள் மட்டுமே விற்கப்பட்ட நிலையில் தற்போது இயற்கை உணவு, மகளிர் சுயஉதவி குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் இங்கு விற்கப்படுகிறது.இதன் அருகிலேயே மீன் வளர்ச்சிக்கழகம் மூலம் மீன் விற்பனையும், சில வாரங்களுக்கு முன் துவக்கி வைக்கப் பட்டது.

விவசாயிகளின் நேரடி விற்பனை காரணமாக, விலை குறைவாக இருக் கும் என நம்பி ஏராளமான மக்கள் இங்கு வந்து காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர். ஆனால் விவசாயிகளுக்கான அடையாள அட்டையை, 'செல்வாக்கு' மூலம் பெற்ற, சில வியாபாரிகளும் இங்கு விற்பனையில் ஈடுபடுகின்றனர். வெளிமார்க்கெட்களில் இருந்து பொருட்களை வாங்கி வந்து, இங்கு கூடுதல் விலைக்கு விற்கின்றனர்.இதனால் வெளிமார்க்கெட்டை விட, பல பொருட்கள் கூடுதல் விலையில் உள்ளன.

நேற்று முன்தினம் நிலவரப்படி, உழவர் சந்தை காய்கறிகளின் விலை விபரம்: (அடைப்புக் குறிக்குள் திண்டுக்கல் காந்தி மார்க்கெட் விலை) கத்தரி 12(8), முருங்கைக்காய் 16(8), பச்சை மிளகாய் 30(28), உருளைக்கிழங்கு 12(10), சின்னவெங்காயம் 12(10), முள்ளங்கி 12(8), சேனைக்கிழங்கு 26(24), இஞ்சி 56(54), நூல்கோல் 18(16), வெண் டை 16(14), சுரைக்காய் 8(5) என விலையில் வித்தியாசம் உள்ளது. தக்காளி 8, கேரட் 20, பெல்லாரி 13, பீன்ஸ் 28, கருணைக்கிழங்கு 26, காலி பிளவர் 8 என இரு இடங்களிலும் ஒரே விலையில் இருந்தன.

இந்நிலையில் நேற்று ஞாயிறு என்பதால் பலரும் மீன் வாங்குவதற்காக, மீன் வளர்ச்சிக்கழக கடைக்கு ஆர்வத்துடன் வந்தனர். காலை 9 மணிக்கு இக்கடை பூட்டப் பட்டு இருந்தது. உழவர் சந்தை நுழைவுவாயில் அருகே தனியார் ரோட்டோர கடைகளில், கூடுதல் விலைக்கு மீன்களை வாங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.
மீன் வளர்ச்சித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "மண்டபம் பகுதியில் இருந்து ஒதுக்கீடு செய்து அனுப்பப்படும் மீன்கள், புதன், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் விற்கப்படுகிறது.

60 கிலோ கடல் மீன்களும், 40 கிலோ அணைப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மீன்களும் விற்பனைக்கு வருகின்றன. பற்றாக்குறையை தவிர்க்க சில நேரங்களில் வெளிமார்க்கெட்களில் வாங்கி, அரசு நிர்ணயிக்கும் விலை க்கு விற்கப்படுகிறது. இரண்டு நாட்களுக்கான ஒதுக்கீடு, நேற்று முன்தினமே விற்று தீர்ந்திருந்ததால், இப்பிரச்னை ஏற்பட்டிருக்கலாம். ஒதுக் கீட்டை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்றார்.
காய்கறி, மீன் என நியாயமான விலையில் பொருட்களை வாங்குவதற்காக, திண்டுக்கல் நகர் மட்டுமின்றி சுற்றுப்புற கிராமத்தினரும் உழவர் சந்தைக்கு வருகின்றனர். அதிகாரிகளின் கண்காணிப்பு இல்லாததால், வெளிமார்க்கெட்டைவிட கூடுதல் விலைக்கு வாங்கிச் செல்ல வேண்டியுள்ளது. மாவட்ட நிர்வாகம் இப்பிரச்னைகளுக்கு தீர்வு காண முன்வர வேண்டும்.

**ஏழு நாட்களுக்கு பின் துவங்கியது மஞ்சள் மார்க்கெட்**

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட் ஏழு நாட்கள் விடுமுறைக்கு பின் மீண்டும் நேற்று துவங்கியது. முதல் நாளில் விலை எப்படி இருக்குமோ என்பதற்காக விவசாயிகள் அதிகளவில் மஞ்சள் மூட்டைகளை கொண்டு வரவில்லை.

ஈரோட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், வெளிமார்க்கெட், ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி ஆகிய மஞ்சள் மார்க்கெட்டுகள் இயங்கி வருகின்றன. தற்போது மஞ்சள் சீஸன் காரணமாக மஞ்சள் மூட்டைகள் அதிகளவில் கொண்டு வரப்படுகிறது. பெரிய மாரியம்மன் கோவில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு மார்ச் 29ம் தேதி முதல் ஏப்ரல் 2ம் தேதி வரை ஐந்து நாட்கள் ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது. சனி, ஞாயிறு வழக்கமான விடுமுறை என மொத்தம் ஏழு நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டது.

விடுமுறைக்கு பின் நேற்று மீண்டும் மார்க்கெட் துவங்கியது. சென்ற சில வாரங்களாக மஞ்சள் விலை குவிண்டால் 12 ஆயிரத்து 900 முதல் 13 ஆயிரம் 800 வரை விற்கப்பட்டதால், நேற்றைய மார்க்கெட்டுக்கு அதிக மஞ்சள் மூடைகள் வரும் என்று வியாபாரிகள் எதிர்பார்த்தனர். ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக மஞ்சள் வரத்து குறைந்தே காணப்பட்டது. மஞ்சள் சீஸன் நேரத்தில் நான்கு மஞ்சள் மார்க்கெட்டுக்கும் 6,000 மூட்டைகள் வரை மஞ்சள் வரத்தாகும். நேற்றைய மார்க்கெட்டுக்கு 4,000 மூட்டைகள் மட்டுமே வரத்தானது.

நேற்று ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு 1,195 மூட்டை மஞ்சள் வரத்தானதில் 905 மூட்டை மஞ்சள் விற்பனை ஆகியது. விரலி மஞ்சள் குவிண்டால் விலை 12 ஆயிரத்து 869, கிழங்கு மஞ்சள் குவிண்டால் விலை 12 ஆயிரத்து 484 ரூபாய்க்கு விற்பனையானது.வெளிமார்க்கெட்டுக்கு மொத்தம் 2,775 மூட்டை மஞ்சள் வரத்தானதில் 209

மூட்டைகள் விற்பனையானது. விரலி ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 883 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 766 ரூபாய்க்கு விற்கப்பட்டது. விடுமுறைக்கு பின் மஞ்சள் விலை எப்படி இருக்குமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் மஞ்சளை கொண்டு வரவில்லை.

வியாபாரி ஒருவர் கூறியதாவது: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு தினந்தோறும் ஏராளமான மஞ்சள் மூட்டைகள் கொண்டு வரப்படுகிறது. மஞ்சள் விரலி, உருண்டை என தனித்தனியாக ரகம் பிரிக்கபட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் இருந்து வடமாநிலங்களுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மஞ்சள் மூட்டைகள் அனுப்பப்பட்டு வருகிறது. மஞ்சள் சீஸன் என்பதால் சில வாரங்களாக மஞ்சள் வரத்து அதிகரித்து காணப்பட்டது.

கர்நாடகா மாநிலப்பகுதியில் இருந்துதான் அதிகளவில் மஞ்சள் வந்தது. தற்போது உள்ளூர் மஞ்சள் வரத்து ஆரம்பித்துள்ளது. பெரியமாரியம்மன் கோயில் பண்டிகையை முன்னிட்டு மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஏழு நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டது. இன்று (நேற்று) நடந்த ஏலத்துக்கு அதிகம் மஞ்சள் மூட்டைகள் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சென்ற காலங்களை விட குறைந்த அளவு மஞ்சளே வந்தது. கடந்த வாரம் இருந்த விலையை விட, இன்றைய (நேற்றைய) மார்க்கெட் விலை குறைவு காரணமாக பத்து சதவீத விவசாயிகள் வரவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**எண்ணெய்வித்து சாகுபடி பயிற்சி தோகமலையில் 2 நாள் முகாம்**

குளித்தலை: தோகமலை யூனியன் கள்ளை பஞ்சாயத்தில் எண்ணெய்வித்து பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி நடந்தது.பஞ்சாயத்து தலைவர் மரியாயி தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் காதர்மொஹைதீன் வரவேற்றார்.

துணை வேளாண்மை அலுவலர் கண்ணதாசன், 'எண்ணெய்வித்து பயிர் சாகுபடியின் முக்கியத்துவம் குறித்து செம்மை நெல் தொழில்நுட்பங்களான குறைந்த விதையளவு நாற்றங்கால், இளம் வயது நாற்று நடுதல், குத்துக்கு ஒரு நாற்று சதுர முறையில் நடவு செய்தல், இயற்கை மற்றும் தொழு உரங்களை இடுதல், கோனாவீடர் கருவி மூலம் களை எடுத்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பம் குறித்து' பேசினார். புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் அனிதா பங்கேற்று பேசினார். தமிழ்செல்வி எண்ணெய்வித்து பயிர் சாகுபடியில் நவீன முறை குறித்தும், ஆனந்தபிரியா எண்ணெய்வித்து பயிர் சாகுபடியில் இயற்கை வேளாண்மை பற்றியும் பயிற்சி அளித்தனர்.

முதல்நாள் முகாமில் 50 விவசாயிகளுக்கு எண்ணெய்வித்து பயிர்களுக்கான நுண்ணூட்ட கூட்டுக்கரைசலுக்கான இடுபொருள் இலவசமாக வழங்கப்பட்டது. இரண்டாம் நாள் தொழில்நுட்ப வல்லுநர் விஜய் எண்ணெய்வித்துப் பயிர் சாகுபடியில் பயிர் பாதுகாப்பு முறை குறித்து விரிவாக பேசினார். சின்னசாமி வயலில் நிலக்கடலைப் பயிரில் இலைவழி நுண்ணூட்ட கூட்டுக்கரைசல் தெளிப்பது பற்றி செயல்விளக்கம் அளித்தார். இரண்டு நாள் பயிற்சியில் விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் இளங்கோவன் நன்றி கூறினார்.

**மலர் கண்காட்சி நாட்களில் இலவச சிறப்பு முகாம்**

கோத்தகிரி: மலர் கண்காட்சி நாட்களில் ஒன்பது இடங்களில் சிறப்பு முகாம் அமைத்து, வாகனங்களை பழுது பார்க்க திட்டமிடப்பட்டுள்ளது. கோத்தகிரி தாலுகா மோட்டார் வாகன பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நலச்சங்கத்தின் பொதுக்குழு கூட்டம், கோத்தகிரியில் நடந்தது.

சங்கம் சார்பில், உழைப்பாளர் தினமான மே 1ம் தேதி, சங்கக் கொடியேற்றி இனிப்பு வழங்குவது; ஊட்டி மலர் கண்காட்சி நாட்களில், சங்கம் சார்பில் 9 இடங்களில் முகாம் அமைத்து பழுதடைந்து நிற்கும் சுற்றுலா வாகனங்களுக்கு, அந்தந்த இடத்திலேயே இலவசமாக பழுது பார்ப்பது; மலர் கண்காட்சி நாட்களில் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க செயலர் புஷ்பராஜ் தலைமை வகித்தார். தலைவர் வெங்கடேஷ் முன்னிலை வகித்தார். பொருளாளர் பிரகாஷ் வரவு, செலவு கணக்குகளை சமர்ப்பித்தார். சங்க துணைத் தலைவர்கள் லாரன்ஸ், நந்தகுமார் பேசினர். கூட்ட ஏற்பாடுகளை, துணை செயலர்கள் முகமது சலீம், ஜெயராஜ் செய்திருந்தனர். ஒருங்கிணைப்பாளர் வேலாயுதம் நன்றி கூறினார்.

**தேயிலை வரத்து குறைந்தும் அதிகரிக்கவில்லை கிராக்கி: உள் நாட்டு வர்த்தகமும் களைகட்டவில்லை**

குன்னூர்: குன்னூர் தேயிலை ஏல மையத்தில், வரத்து குறைந்தும் கிராக்கி அதிகரிக்கவில்லை; உள்நாட்டு வர்த்தகம் களைகட்டாததால் விலை வீழ்ச்சி தொடர்கிறது; ரூ.3.50 கோடி மதிப்புள்ள தேயிலைத் தூள் தேக்கமடைந்தது; குறைந்தபட்ச விலை குறைந்ததால், பசுந்தேயிலைக்கான விலை சரியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 13க்கான ஏலம் நடந்தது; மொத்தம் 13.08 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயாராக இருந்தது. இலை ரகம் 8.63 கிலோ, டஸ்ட் ரகம் 4.45 லட்சம் கிலோ அடங்கும். உள்நாட்டு வர்த்தகத்தை பொறுத்தவரை வழக்கமாக பங்கெடுக்கும் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், பஞ்சாப் மாநில வர்த்தகர்களின் பங்களிப்பு மிகக் குறைவாக இருந்தது. ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை, பாகிஸ்தான் வர்த்தகர்கள் மட்டும் குறைந்தளவு தேயிலைத் தூளை வாங்கினர். வர்த்தகம் களைகட்டாததால் 3.50 கோடி மதிப்புள்ள, 40 சதவீத தூள் விற்பனையாகாமல் தேக்கமடைந்தது.

அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 3 ரூபாய் குறைந்தது. சி.டி.சி., ரகத்தில், தர்மோனா தேயிலைத் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் 153 ரூபாய் விலை கிடைத்தது; 50க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. ஆர்தோடக்ஸ் ரகத்தில் கர்சன் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 133 ரூபாய் விலை கிடைத்தது; 20க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. விலை நிலவரத்தை பொறுத்தவரை, இலை ரகத்தில் சாதாரண ரக தூளின் விலை 49-52 ரூபாய், சிறந்த ரக தூளின் விலை 90 - 108 ரூபாயாக இருந்தது; டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளின் விலை 50 -52 ரூபாய், சிறந்த ரக தூளின் விலை 90- 120 ரூபாயாக இருந்தது.

விற்பனை எண் 14க்கான ஏலம் வரும் 15, 16ம் தேதிகளில் நடக்கிறது; மொத்தம் 13.11 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இலை ரகம் 9.00 லட்சம் கிலோவும் டஸ்ட் ரகம் 4.11 லட்சம் கிலோவும் அடங்கும்; இது கடந்த ஏலத்தை விட 1.3 லட்சம் அதிகம். வரத்து குறைந்தும் உயராத தேவை: தேயிலை வரத்து குறையும் போது, தேயிலைத் தூளுக்கான கிராக்கி அதிகரிக்கும். மாறாக, இந்த வாரம் நடந்த ஏலத்தில் குறைந்தளவு தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. கடந்த 15 வாரங்களை ஒப்பிடுகையில் இதுவே குறைந்த அளவு வரத்து. இருப்பினும், விற்பனை களைகட்டாமல், பெருமளவு தேயிலை தூள் தேக்கமடைந்ததால் தேயிலை வர்த்தகர்கள் கவலையடைந்துள்ளனர்.

குறைந்தது குறைபட்ச விலை: கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ தேயிலைத் தூளின் குறைந்தபட்ச விற்பனை விலை 50 ரூபாய்க்கு அதிகமாகவே இருந்தது. விலை வீழ்ச்சி தென்பட்ட போதிலும் கூட 50 - 56 ரூபாய் வரை ஒரு கிலோ தேயிலைத் தூள் விற்கப்பட்டது. இந்த வாரம் நடந்த ஏலத்தில் ஒரு கிலோ தேயிலைத் தூளின் குறைந்தபட்ச விலை 49 ரூபாயாக குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கான விலை குறைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

---

1,000 குவிண்டால் மஞ்சள் ரூ.ஒரு கோடிக்கு ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 1,000 குவிண்டால் மஞ்சள் ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது.ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மஞ்சள் அறுவடை பணி நடந்து வருகிறது. இங்கு விளையும் மஞ்சள் மட்டுமின்றி கச்சிராபாளையம், பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதியில் அறுவடை செய்யும் மஞ்சள் சுத்தம் செய்து, ஈரோடு, நாமக்கல் நாமகிரிபேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், தனியார் மண்டிகளில் நடக்கும் மறைமுக டெண்டர் ஏலத்தில் விவசாயிகள் மஞ்சள் விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த மார்ச் 6ம் தேதி ஒரு குவிண்டால் மஞ்சள் 10 ஆயிரத்து 789 ரூபாய்க்கு விற்கப்பட்டது. 13ம் தேதி ஒரு குவிண்டால்12 ஆயிரத்து 899 ரூபாயும், 20ம் தேதி விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 669 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த மாதம் 27ம் தேதி விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 320 ரூபாயும், உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 20 ரூபாயும், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 9 ரூபாய் விற்பனையானது.

ஒரு குவிண்டால் மஞ்சள் 1,349 ரூபாய் விலை குறைவால் விவசாயிகள் கவலையடைந்தனர். நேற்று முன்தினம் 3ம் தேதி இரவு நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 529 ரூபாயும், குறைந்த பட்சமாக 12 ஆயிரத்து 929 ரூபாயும், உருண்டை மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 319 ரூபாயும், குறைந்த பட்சமாக ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 919 ரூபாயும், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் 11 ஆயிரத்து 389 ரூபாயும், குறைந்த பட்சமாக ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 859 ரூபாக்கு ஏலம் போனது. ஆயிரத்து 500 மூட்டைகள் கொண்ட ஆயிரம் குவிண்டால் மஞ்சள், ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை காட்டிலும் ஏலத்துக்கு மஞ்சள் வரத்து அதிகரித்தும், ஒரு குவிண்டாலுக்கு 209 ரூபாய் விலை உயர்ந்ததாலும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மாங்காய் மகசூல் குறைந்ததால் உடுமலை விவசாயிகள் கவலை**

உடுமலை: கோடை வெயிலின் தாக்கத்தால், 'மா' மகசூல் கடந்த ஆண்டை விட இந்தாண்டு மிகவும் குறைந்துள்ளது.

உடுமலை பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். உடுமலை அருகே உள்ள கொங்குரார் குட்டை, கொழுமம், கொமரலிங்கம், வல்லக்குண்டாபுரம், ஜல்லிபட்டி, திருமூர்த்தி மலை, ஆண்டிபட்டி மற்றும் சுற்றுப்பகுதிகளில், பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், 'மா' அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில், கல்லாமணி, நீளம், செந்தூரம் உள்ளிட்ட 'மா' ரகங்கள் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் உடுமலை பகுதிகளில் இரண்டு பருவங் களில், 'மா' விளைச்சல் கிடைக்கிறது. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாதங்களில், முதல் பருவம்; அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்கள் இரண்டாம் பருவம் என 'மா' விளைச்சல் கிடைத்து வருகிறது. இப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் 'மா' உள்ளூர், வெளி மாவட்டங்கள், கேரளா மற்றும் வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப் பபடுகிறது. விவசாயிகளுக்கு போதிய லாபம் கிடைத்து வருகிறது. தற்போது துவங்கியுள்ள முதல் சீசனில், கடந்த ஆண்டை விட மா விளைச்சல் மிகவும் குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது: மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரப்பகுதிகளான இப்பகுதிகளில், இரண்டு சீசன்களின் 'மா' கிடைக்கிறது. தற்போது, முதல் சீசன் துவங்கியுள்ள நிலையில், மகசூல் இந்த ஆண்டு கடந்த ஆண்டுகளை விட மிகவும் குறைந்துள்ளது. கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், மா மரத்தில் பூக்கள் கருகி வருகிறது. மரத்திலிருந்து பிஞ்சுகளாக கீழே விழத்தொடங்கியுள்ளன. செடிக்கு 50 கிலோ கிடைப்பது இந்த ஆண்டு 10 முதல் 20

கிலோ வரை கிடைப்பதே அரிதாக உள்ளது. கோடை மழை கை கொடுத்தால் மட்டுமே மா விளைச்சல் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. மா மகசூல் பாதிக்கப்பட்டால், விலை உயரும் வாய்ப்பு ஏற்படும் என்றனர்.

---

## *பஞ்சு, மின்சார செலவு அதிகமாவதால் நூல் விலையை குறைக்க வாய்ப்பு இல்லை சைமா தலைவர் துளசிதரன் தகவல்*

*கோவை,ஏப்.6–*

*பஞ்சு, மின்சார செலவு அதிகமாவதால் நூல் விலையை குறைக்க வாய்ப்பு இல்லை என்று சைமா தலைவர் துளசிதரன் கூறினார்.*

*இது குறித்து அவர் கோவையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–*

*80 சதவீதம் செலவு*

*கடந்த 2008–09–ம் ஆண்டில் நெசவுத் தொழில் உலகளவில் மிகப்பெரிய சிரமத்தினை சந்தித்தது. இந்தியாவில் மிகச்சிறந்த நூல்பாலைகள் கூட முதன் முறையாக பண இழப்பினை தொடர்ச்சியாக பல காலாண்டுகளில் சந்தித்து வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடனை மாற்றியமைத்தது. இந்த நிலையில் நூற்பாலைகளில் கடந்த 2 ஆண்டுகளாக எந்த விதமான புதிய மூலதனமோ, நவீன மயமோ ஏற்படுத்தப்படவில்லை.*

*நூற்பாலைகளை பொறுத்தவரை அதிக மூலதனம், வேலை ஆட்கள் மற்றும் மின்சாரத்தினை அடிப்படையாக கொண்டதால் நூல் உற்பத்தியில், தற்போது பருத்திபஞ்சு, மின்சாரம் ஆகியவற்றுக்கு 80 சதவீதம் செலவாகிறது. கடந்த 2 ஆண்டுக்கு முன்பு பருத்தி பஞ்சு விலை 40 சதவீதம் இருந்தது. தற்போது 25 சதவீதமாக உயர்ந்து மொத்தம் 65 சதவீதம் என்ற நிலை உள்ளது.*

*இரு மடங்கு உயர்வு*

*மின்சாரம் யூனிட் ஒன்றுக்கு ரூ.7–க்கு கிடைத்தது. தற்போது டீசல் என்ஜின் பயன்படுத்துவதால் யூனிட் ரூ.12 ஆக உயர்ந்து உள்ளது. மின்சாரத்தை பொறுத்தவரை ஒரு கிலோ நூல் உற்பத்திக்கு ரூ.40 செலவாகிறது. இதுதவிர தொழிலாளர் சம்பளம் கடந்த ஆண்டுகளில் இரு மடங்கு உயர்ந்து உள்ளது.*

*ஆந்திர மாநிலத்தில் மின்சார செலவு, விற்பனையில் 8 சதவீதமாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் 12 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஆந்திர மாநிலத்தில் நூற்பாலைகள் 8 முதல் 10 மணி அளவிலான மின் தட்டுப்பாட்டை சந்திக்கும் வேளையில் தமிழ்நாட்டில் இது 12 மணி நேரமாக உள்ளது.*

*52 லட்சம் பேல்கள் ஏற்றுமதி*

*சங்கர்–6 என்ற ரக பஞ்சின் விலை ஜூலை 2009–ல் ரூ.25,850 என்று விற்பனை ஆனது. தற்போது இதன் விலை உயர்ந்துள்ளது. சுத்தப்படுத்தப்பட்ட பருத்தியின் விலை கிலோவுக்கு 21 ரூபாய் அதிகரித்துள்ளது. உலக அளவில் பஞ்சின் விலை மிக அதிகமாக 67 சதவீதம் உயர்ந்துள்ளது. பருத்தி ஆலோசனைக்குழு சார்பில் கடந்த மார்ச் முடிய, 55 லட்சம் பேல்களை ஏற்றுமதி செய்ய நிர்ணயித்தது. ஆனால் தற்போது 52 லட்சம் பேல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு மேலும் 25 லட்சம் பேல்களுக்கு ஏற்றுமதிக்கான பதிவு செய்யப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 2009–ல் நூற்பாலையில் அப்ரண்டீஸ்(பயிற்சி) மற்றும் தற்காலிக தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.130 முதல் 150 வரை இருந்தது. தற்போது ரூ. 230 முதல் ரூ.260 –ஆக உயர்ந்துள்ளது.*

*நூல் விலையை குறைக்க முடியாது*

*சைமா உறுப்பினர்களை பொறுத்தவரை அடிக்கடி நூல் விலை உயர்த்துவதை வழக்கமாக கொள்ள மாட்டார்கள். கடைசியாக 2009–ம் ஆண்டு டிசம்பர் மாதம் நூல் விலை மாற்றியமைக்கப்பட்டது. கடந்த 4 மாதங்களிலும் அடக்கவிலை உயர்வினை முழுமையாக நூல் விலை வழியாக வாடிக்கையாளர்கள் மீது சுமத்தவில்லை. நூல் மில்களை பொறுத்தவரை 8 முதல் 10 சதவீதம் வரை லாபம் இருந்தால் தான் அவற்றை இயக்க முடியும். தற்போது நூற்பாலைகள் 4 முதல் 6 சதவீதத்தையே லாபமாக கொண்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் சர்வேயின் படி வியாபாரத்துக்கும், மூலதனத்துக்கும் உள்ள விகிதாச்சாரம் ஒன்றிற்கும் குறைவாகவே உள்ளது. ஆகவே நூல் விலையை பொறுத்தவரை குறைக்க முடியாது. இன்னும் கூடுதலாக்கத்தான் முடியும்.*

*400 மில்லியன் கிலோ*

*நூல் உற்பத்தியின் அடக்க விலையும் உள்நாட்டு வியாபாரத் தேவை காரணமாகவே நூல் விலை உயர்ந்துள்ளது. பருத்தி நூலின் ஏற்றுமதி 555 மில்லியன் கிலோ கிராமில் இருந்து தற்போது 400 மில்லியன் கிலோ கிராமாக குறைந்துள்ளது. நூற்பாலைகள் உலக வர்த்தக சந்தையில் இடம் பெறும் வகையில் மிகப்பெரிய அளவில் மூலதனம் செய்துள்ளது. உலக நூல் வர்த்தகத்தில் 20 சதவீதத்தை தன்னகப்படுத்தி உள்ளது.*

*இவ்வாறு துளசிதரன் கூறினார்.*

## ஓடையாக காட்சி அளிக்கும் சோலையார் அணை



பரம்பிக்குளம்– ஆழியாறு திட்டத்தின் அடிப்படை அணையான சோலையார் அணைக்கு கடந்த சில நாட்களாக நீர்வரத்து அதிகரித்து இருந்தது. ஆனால், கடந்த 2 நாட்களாக வால்பாறையில் மழை பெய்யாத காரணத்தால் சோலையார் அணையின் நீர்மட்டமும் வெகுவாக குறைந்து 18 அடியாக காணப்படுகிறது. சோலையார் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதி நீர்வரத்து இன்றி ஓடையாக காட்சி அளிப்பதை படத்தில் காணலாம்.